ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் கலைக் கல்லூரி
திருப்பனந்தாள் – 612504
S.K.S.S ARTS COLLEGE, THIRUPPANANDAL - 612504





# வினாவங்கி

தாளின் தலைப்பு

## நன்னூல் - சொல்லதிகாரம் (காண்டிகையுரை)

CORE COURSE - IV I B.LIT

பாடக்குறியீடு : 16LCCLT4

பருவம் II

தயாரித்தவர்



முனைவர் ம.புவனேஸ்வரி, எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை

## CORE COURSE IV

### நன்னூல் - சொல்லதிகாரம் (காண்டிகையுரை)

**நோக்கம்**

1. நால்வகைச் சொற்களின் இலக்கணத்தைக் கற்றுத்தருதல்.
2. மரபுவழித் தமிழ்ச் சொற்றொடர்களைப் பிழையின்றி எழுதக் கற்பித்தல்.
3. தமிழ்ச் சொற்களின் ஆற்றல் மிகு பயன்பாட்டை அறியச் செய்தல்.

**பயன்கள்**

1. தமிழ் மொழியின் சொல் இலக்கணத்தை அறிவர்.
2. தமிழ்ச் சொற்களின் பயன்பாட்டை அறிவர்.
3. மொழிநடையில் தேர்ச்சி பெறுவர்.

| | | |
|---|---|---|
| **அலகு - 1** | பெயரியல் | 20 மணி |
| **அலகு - 2** | வினையியல் | 20 மணி |
| **அலகு - 3** | பொதுவியல் | 20 மணி |
| **அலகு - 4** | இடையியல் | 20 மணி |
| **அலகு - 5** | உரியியல் | 10 மணி |

குறிப்பு: ஐந்து அலகுகளிலும் சமஅளவில் வினாக்கள் அமைதல் வேண்டும்.

**பாடநூல்:**

1. நன்னூல் காண்டிகையுரை - ஆறுமுக நாவலர் பதிப்பினைத்தழுவி அமைந்தது, பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை - 104

**பார்வை நூல்கள்:**

1. நன்னூல் மூலமும் விருத்தியுரையும் - பதிப்பாசிரியர் அ. தாமோதரன், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை
2. இலக்கண வரலாறு - இரா. இளங்குமரன்
3. தமிழ் வரலாற்றிலக்கணம் - அ. வேலுப்பிள்ளை

**இணைய முகவரிகள்**

1. www.store.tamillexicon.com
2. www.kala.tamilforu.blogspot.com
3. www.noolagam.com

# அலகு - 1

## பகுதி - அ

- **சரியான விடையைத் தேர்ந்தெடு**

1. வழக்கின் வகைகள்
    அ) 3
    ஆ) 6
    இ) 5
    ஈ) 4
2. உணர்வினின் வல்லோர் அணிபெறச் செய்வன
    அ) செய்யுள்
    ஆ) சொல்
    இ) பொருள்
    ஈ) மொழி
3. ஒன்றொழி பொதுச்சொல் என்பது
    அ) அணி
    ஆ) உவமை
    இ) வெளிப்படை
    ஈ) குறிப்பு
4. பெற்றம் என்னும் சொல்
    அ) இயற்சொல்
    ஆ) வடசொல்
    இ) திசைச்சொல்
    ஈ) திரிசொல்
5. கீழ்க்கண்டவற்றுள் உயர்திணை ஆண்பாற்பெயர்
    அ) விடலை
    ஆ) நங்கை
    இ) தையல்
    ஈ) தந்தை
6. "கார் அறுத்தது" என்பது
    அ) சினையாகுபெயர்

ஆ) காலவாகுபெயர்

இ) பொருளாகுபெயர்

ஈ) தொழிலாகுபெயர்

7. திரிபில் பெயர் என்று சுட்டப்படுவது

அ) எட்டாம் வேற்றுமை

ஆ) மூன்றாம் வேற்றுமை

இ) ஏழாம் வேற்றுமை

ஈ) முதல் வேற்றுமை

8. நான்காம் வேற்றுமைக்குரிய உருபு

அ) கு

ஆ) இன்

இ) கண்

ஈ) ஐ

9. அன்னையை "அன்னாய்" என்று அழைப்பது

அ) விகாரம்

ஆ) நீட்சி

இ) விளி

ஈ) திரிபு

10. முதலை ஐயுறின் சினையை --------- உறும்

அ) கு

ஆ) கண்

இ) ஆல்

ஈ) அது

விடைகள் 1.ஆ 2.அ 3.ஈ 4.இ 5.அ 6.ஆ 7.ஈ 8.அ 9.இ 10.ஆ

## பகுதி - ஆ

## ❖ ஓரிரு சொற்களில் விடையளி

11. மூவகை மொழிகள் யாவை?

12. உயர்திணை, அஃறிணை வேறுபடுத்திக் காட்டுக.

13. இடக்கரடக்கல் என்றால் என்ன? உதாரணம் தருக.

14. விகாரத்தின் வகைகளைச் சுட்டுக.

15. ”கற்கறித்து நன்கட்டாய்” என்பது எவ்வகை மொழி?

16. பலபொருள் குறித்த ஒரு சொல்லிற்கு உதாரணம் தருக.

17. ஆகுபெயர் என்றால் என்ன?

18. மூன்றாம் வேற்றுமைக்குரிய உருபுகளையும் பொருள்களையும் குறிப்பிடுக.

19. விளியுருபு ஏலாப் பெயர்கள் யாவை?

20. உருபு மயக்கம் என்றால் என்ன?

## பகுதி - இ

### ❖ விரிவாக விடையளி

21. ”வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே” - விளக்குக.

22. வழக்கு என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிட்டு விளக்கம் தருக.

23. குறிப்பு மொழிகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் ஓர் உதாரணம் காட்டுக.

24. திசைச்சொல், வடசொல் ஆகியவற்றை விளக்குக.

25. அஃறிணை ஒன்றன்பாற் பெயர், பலவின்பாற் பெயர்களை எடுத்துரைக்க.

26. பன்னிரு பொதுப்பெயர்கள் யாவை? வகைப்படுத்துக.

27. ஆறாம் வேற்றுமையின் இலக்கணம் யாது? அதன் பொருள்களைச் சுட்டுக.

28. ஒருசார் னகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் விளியேற்கும் முறைகளைக் குறிப்பிடுக.

29. ”பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்” - எடுத்துக்காட்டுகள் தருக.

30. ”படர்க்கையோரைத் தன்முகமாகத் தானழைப்பதுவே” நூற்பாவைக் குறிப்பிட்டு விளக்குக.

## பகுதி - ஈ

## ❖ கட்டுரை வடிவில் விடையளி

31. சொல்லின் பொதுவிலக்கணத்தை விவரித்துக் கட்டுரை வரைக.
32. சொல்லின் வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
33. உயர்திணை ஆண்பாற் பெயர்களை வகைப்படுத்துக.
34. இருதிணைப் பொதுப்பெயர்களை விவரிக்க.
35. ஆகுபெயரின் வகைகளை விளக்கிக் கட்டுரை வரைக.
36. வேற்றுமை குறித்த செய்திகளைத் தொகுத்துரைக்க.
37. "ஏழன் உருபு கண்ணாதி யாகும்" - விளக்கி எடுத்துக்காட்டுகள் தருக.
38. எட்டாம் வேற்றுமையைக் குறிப்பிட்டு விளியுருபு ஏற்கும் பெயர்கள், ஏலாப் பெயர்களை உதாரணங்கள் தந்து விளக்குக.
39. எழுவாய் வேற்றுமை, விளி வேற்றுமை பற்றிய செய்திகளை மதிப்பிடுக.
40. பெயரியல் எடுத்துரைக்கும் செய்திகளை ஆய்க.

# அலகு - 2

## பகுதி - அ

## ❖ சரியான விடையைத் தேர்ந்தெடு

1. ஆறும் தருவது --------------
    - அ) பெயர்
    - ஆ) இடை
    - இ) வினை
    - ஈ) உரி
2. குழையினன் என்பது எவ்வகை வினை
    - அ) தெரிநிலை
    - ஆ) வியங்கோள்

இ) ஏவல்

ஈ) குறிப்பு

3. து, று, டு என முடியும் வினைமுற்று

அ) ஆண்பால் படர்க்கை

ஆ) ஒன்றன்பால் படர்க்கை

இ) பலவின்பால் படர்க்கை

ஈ) பெண்பால் படர்க்கை

4. ”உண்ணும்” என்பது

அ) பெயரெச்சம்

ஆ) முற்றெச்சம்

இ) வினையெச்சம்

ஈ) குறிப்பெச்சம்

5. வினையெச்ச வாய்பாடுகளுள் ஒன்று

அ) செய்த

ஆ) செய்கின்ற

இ) செய்து

ஈ) செய்யும்

6. ஆக்க வினைக்குறிப்பு --------------- இன்றி இயலா.

அ) சொல்

ஆ) வினை

இ) குறிப்பு

ஈ) ஆக்கம்

7. ஆம்பொருள், போம்பொருள் - இவற்றில் இடம்பெற்றுள்ள பெயரெச்ச வாய்பாடு

அ) செய்த

ஆ) செய்யும்

இ) செய்கின்ற

ஈ) செய்யூ

8. பின்வருவனவற்றுள் வினையெச்சம் எது?

அ) நடந்து

ஆ) கண்ட

இ) சென்றான்

ஈ) உண்ணாநின்ற

9. பெயரெச்ச வாய்பாடுகள்

அ) 9

ஆ) 6

இ) 5

ஈ) 3

10. வினைமுற்றே ---------- ஆகலும் உளவாம்.

அ) பெயர்

ஆ) குறிப்பு

இ) வினையெச்சம்

ஈ) இடை

விடைகள் 1.இ 2.ஈ 3.ஆ 4.அ 5.இ 6.ஈ 7.ஆ 8.அ 9.ஈ 10.இ

## பகுதி - ஆ

### ❖ ஓரிரு சொற்களில் விடையளி

11. தெரிநிலை வினை என்றால் என்ன?
12. வினைச்சொற்களின் வகைகள் யாவை?
13. குறிப்பு வினையின் பொதுவிலக்கணம் தருக.
14. பலர்பால் படர்க்கை வினைமுற்றுக்குரிய ஈறுகளைக் குறிப்பிடுக.
15. "இயலும் இடம்பால் எங்கும் என்ப" - விளக்கம் தருக.
16. ஐம்பால் மூவிடத்திற்கும் உரிய வினைக்குறிப்பு முற்றுகள் யாவை?
17. பெயரெச்சத்திற்குரிய வாய்பாடுகளைக் குறிப்பிடுக.
18. வினையெச்சம் என்றால் என்ன?
19. "படுமகன் கிடக்கை காணூஉ" - என்னும் தொடரில் இடம்பெற்றுள்ள வினையெச்ச வாய்பாடு எது?
20. "எவனென் வினாவினைக்குறிப்பு இழி இருபால்" - பொருள் தருக.

## பகுதி - இ

### ❖ விரிவாக விடையளி

21. தெரிநிலைவினை, குறிப்பு வினை ஆகியவற்றை எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.

22. "முற்று வினைப்பதம் ஒன்றே மூவொன்பானாம்" - விளக்கம் தருக.

23. தெரிநிலை வினைமுற்றின் வகைகளைக் குறிப்பிடுக.

24. இருதிணைப் பொதுவினைகளை எடுத்துரைக்க.

25. "எஞ்ச நிற்பது பெயரெச்சம்மே" - விளக்கி எடுத்துக்காட்டுகள் தருக.

26. முக்காலமும் முறைதரும் வினையெச்ச வாய்பாடுகளை வகைப்படுத்தி உதாரணங்களுடன் விளக்குக.

27. "சினைவினை சினையொடும் முதலொடும் செறியும்" - தெளிவுபடுத்துக.

28. "செய்யும்" என்னும் பெயரெச்ச வாய்பாட்டிற்குரிய சிறப்பு விதிகளை எடுத்துரைக்க.

29. யார், எவன் - ஆகியவை பாற்பொதுவினைகளாக எவ்வாறு அமையும்?

30. வினைமுற்று, வினைக்குறிப்புமுற்று ஆகியவை எச்சங்களாகவும் அமைவதைப் புலப்படுத்துக.

## பகுதி - ஈ

### ❖ கட்டுரை வடிவில் விடையளி

31. வினைச்சொற்களின் வகைகளை விளக்கிக் கட்டுரை வரைக.

32. தெரிநிலை வினைமுற்றின் வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

33.இருதிணைக்கும் உரிய பொதுவினைகளை எடுத்துக்காட்டுகளுடன் நிறுவுக.

34. பெயரெச்சம் பற்றிய செய்திகளைத் தொகுத்துக் கட்டுரை வரைக.

35. வினையெச்சம் பற்றிய செய்திகளை மதிப்பிடுக.

36. பெயரெச்சம், வினையெச்சம் ஆகியவற்றிற்கிடையேயான ஒற்றுமை, வேற்றுமைகளை ஆய்க.

37. "சினைவினை சினையொடும் முதலொடும் செறியும்", "சொல் திரியினும் பொருள் திரியா வினைக்குறை" என்னும் நூற்பாக்கள் உணர்த்தும் செய்திகளை நிறுவுக.

38. வினையெச்சங்களின் முடிபுகளுக்குப் புறனடையாகச் சொல்லப்பட்டவற்றை எடுத்துரைக்க.

39. வியங்கோள் வினைமுற்று பற்றிய செய்திகளை விவரிக்க.

40. வினையியல் உணர்த்தும் செய்திகளைத் தொகுத்துக் கட்டுரை வரைக.

## அலகு - 3

### பகுதி - அ

❖ **சரியான விடையைத் தேர்ந்தெடு**

1. "ஆயிரம் மக்கள் தாவடி போயினார்" - என்பதில் ஒழிக்கப்படும் பால்

    அ) ஆண்பால்

    ஆ) பெண்பால்

    இ) பலர்பால்

    ஈ) பலவின்பால்

2. "சாத்தனும் வந்தான்" - இதில் இடம்பெறும் எச்சம்

    அ) உம்மையெச்சம்

    ஆ) எதிர்மறையெச்சம்

    இ) பிரிநிலையெச்சம்

    ஈ) பெயரெச்சம்

3. காலம் கரந்த பெயரெச்சம் -------------------

    அ) வேற்றுமைத் தொகை

    ஆ) பண்புத்தொகை

    இ) உவமத்தொகை

ஈ) வினைத்தொகை

4. இறை என்பதன் பொருள்

அ) திணை

ஆ) காலம்

இ) வினா

ஈ) விடை

5. “அவன் வந்தாள்” - இதில் இடம்பெறும் வழு

அ) பால்வழு

ஈ) திணைவழு

இ) இடவழு

ஈ) காலவழு

6. விடையின் வகைகள்

அ) 8

ஆ) 6

இ) 4

ஈ) 5

7. ”உயர்ந்தோங்கு பெருவரை” என்பது

அ) மரபு

ஆ) சிலேடை

இ) ஒருபொருட்பன்மொழி

ஈ) அடுக்குத்தொடர்

8. ஒப்போன் மாட்டு இரக்கும் சொல்

அ) ஈ

ஆ) விடு

இ) கொடு

ஈ) தா

9. முன்னம் என்னும் சொல்லின் பொருள்

அ) மரபு

ஆ) வினை

இ) குறிப்பு

ஈ) வெளிப்படை

10. அடிசில் அயின்றார் என்பது

அ) மரபுவழாநிலை

ஆ) பால்வழாநிலை

இ) திணைவழாநிலை

ஈ) காலம் வழாநிலை

விடைகள் 1.ஆ 2.அ 3.ஈ 4.ஈ 5.அ 6.அ 7.இ 8.ஈ 9.இ 10.அ

## பகுதி - ஆ

### ❖ ஓரிரு சொற்களில் விடையளி

11. இடைப்பிறவரல் என்றால் என்ன?
12. "ஒருமொழி ஒழிதன் இனங்கொளற் குறித்தே" - எடுத்துக்காட்டு தருக.
13. உவம உருபுகள் நான்கினைச் சுட்டுக.
14. வழு என்றால் என்ன?
15. கொளல் வினாவிற்குச் சான்று தருக.
16. மரபு என்பது யாது?
17. இயற்கைப் பொருளை எவ்வாறு கிளத்தல் வேண்டும்?
18. இரக்கும் சொற்களை வகைப்படுத்துக.
19. இரட்டைக்கிளவி என்றால் என்ன?
20. "தாப்பிசை" - பொருள் தருக.

## பகுதி - இ

### ❖ விரிவாக விடையளி

21. எச்சங்களை வகைப்படுத்தி விளக்குக.
22. உவமத் தொகையை விளக்கி உவம உருபுகளுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.
23. தொகாநிலைத் தொடர்மொழிகளை எடுத்துரைக்க.
24. "வினா ஆறும் இழுக்கார்" - சான்றுகள் தந்து விளக்குக.
25. எண்வகை விடைகளைக் குறிப்பிடுக.

26. இடம் வழுவாமல் எவ்வாறு காக்க வேண்டும்?
27. அடுக்குத்தொடர் அமையும் முறைகளைப் புலப்படுத்துக.
28. மரபு வழுவமைதிக்கு ஏதேனும் மூன்று சான்றுகள் தருக.
29. "அஃறிணை மருங்கினும் அறையப்படுமே" - விளக்கம் தருக.
30. பூட்டுவிற் பொருள்கோள் என்றால் என்ன? உதாரணம் காட்டுக.

## பகுதி - ஈ

### ❖ கட்டுரை வடிவில் விடையளி

31. தொகைநிலைத் தொடர்மொழிகளை விளக்கி வரைக.
32. "அத்தொகை ஆறாகும்" - விவரிக்க.
33. வழு, வழாநிலை, வழுவமைதி ஆகியவற்றை விளக்கி ஒவ்வொன்றிற்கும் இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
34. மரபு வழாநிலை, வழுவமைதிகளைத் தொகுத்துக் கட்டுரை வரைக.
35. திணை, பால், இடம், கால வழுவமைதிகளை விரித்துரைக்க.
36. வினா, இறையின் பெயரும் முறையும் தொகையும் பற்றி எடுத்துரைக்க.
37. பொருள்கோளின் வகைகளை விளக்கி முதல் இரண்டு பொருள்கோள்களைச் சான்றுகள் காட்டி நிறுவுக.
38. "பொருள்கோள் எட்டே" என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.
39. யாற்றுநீர், மொழிமாற்று, நிரனிறைப் பொருள்கோள்களை விவரிக்க.
40. தாப்பிசை, அளைமறிபாப்பு, கொண்டுகூட்டு, அடிமறிமாற்றுப் பொருள்கோள்களை விளக்கி வரைக.

## அலகு - 4

## பகுதி - அ

### ❖ சரியான விடையைத் தேர்ந்தெடு

1. இடைச்சொற்கள் என்பவை

அ) வேற்றுமை உருபுகள்

ஆ) அன், ஆன் முதலிய சாரியை உருபுகள்

இ) உவம உருபுகள்

ஈ) இவை மூன்றும்

2. இடைச்சொற்கள் எவற்றைச் சார்ந்து வரும்

அ) பெயர்

ஆ) வினை

இ) பெயர், வினை

ஈ) உரி

3. "கொளலோ கொண்டோன்" என்பது

அ) ஒழியிசை

ஆ) பிரிநிலை

இ) தேற்றம்

ஈ) சுட்டு

4. "அழுக்காறென ஒரு பாவி" - இதில் இடம்பெறும் இடைச்சொல்

அ) ஒரு

ஆ) என

இ) பாவி

ஈ) எதுவுமில்லை

5. உம்மை இடைச்சொற்கள்

அ) 5

ஆ) 4

இ) 8

ஈ) 6

6. முற்றும்மை ஒரோவழி --------------- ஆகும்.

அ) எச்சம்

ஆ) இடைச்சொல்

இ) உவமை

ஈ) ஏகாரம்

7. "சிறியகட் பெறினும் எமக்கீயு மன்னே" - இத்தொடரில் "மன்" என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்

அ) மிகுதி

ஆ) அசைநிலை

இ) கழிவு

ஈ) ஆக்கம்

8. ஐயப் பொருளைத் தரும் இடைச்சொல்

அ) ஒடு

ஆ) கொல்

இ) மற்று

ஈ) தில்

9. "பெறுகதில் அம்ம யானே" - இத்தொடரில் இடம்பெற்றுள்ள இடைச்சொல்

அ) எதுவுமில்லை

ஆ) பெறுக

இ) அம்ம

ஈ) தில்

10. பொருளே உணர்த்தாது சொற்களை அசைத்து நிற்பன

அ) உரையசை

ஆ) அசைநிலை

இ) இசைநிறை

ஈ) எதுவுமில்லை

விடைகள் 1.ஈ 2.இ 3.அ 4.ஆ 5.இ 6.அ 7.இ 8.ஆ 9.ஈ 10.ஆ

## பகுதி - ஆ

### ❖ ஓரிரு சொற்களில் விடையளி

11. இடைச்சொல்லின் பெயர்க்காரணம் தருக.
12. அசைநிலை என்றால் என்ன?
13. இடைச்சொற் பொருள்கள் ஏதேனும் இரண்டினைச் சுட்டுக.
14. உரையசை என்பதன் பொருள் யாது?
15. "தில்" இடைச்சொல் தரும் பொருள்கள் யாவை?
16. ஏகார இடைச்சொல்லுக்கு ஓர் உதாரணம் தருக.

17. இசைநிறைத்தற் பொருளில் மட்டும் வரும் இரண்டு இடைச்சொற்கள் யாவை?

18. ”மா” என்னும் இடைச்சொல்லின் இலக்கணம் யாது?

19. சாத்தனே கொற்றனே தேவனே என்பது எவ்வகை இடைச்சொல்?

20. எல்லா இடத்தும் வரும் அசைச்சொற்கள் இரண்டினைச் சுட்டுக.

## பகுதி - இ

### ❖ விரிவாக விடையளி

21. இடைச்சொல்லின் பொதுவிலக்கணம் தருக.

22. இடைச்சொற் பொருள்களைக் குறிப்பிட்டு உதாரணங்கள் தருக.

23. ஏகார இடைச்சொற் பொருள்களை விளக்குக.

24. ”உம்மை எட்டே” - விவரிக்க.

25. உம்மை இடைச்சொல்லின் பொருள்களை எடுத்துரைக்க.

26. என, என்று என்னும் இடைச்சொற்கள் பற்றிக் குறிப்பிடுக.

27. ”மன்” இடைச்சொல் தரும் பொருள்களை விவரி.

28. ஓகார இடைச்சொல் பற்றிக் குறிப்பிடுக.

29. “ஆறு ஏகாரம்மே” - விளக்கம் தருக.

30. முன்னிலை அசைகள் பற்றி எடுத்துரைக்க.

## பகுதி - ஈ

### ❖ கட்டுரை வடிவில் விடையளி

31. ”ஒன்றும் பலவும் வந்து ஒன்றுவது இடைச்சொல்” - விவரி.

32. இடைச்சொல்லின் பொதுவிலக்கணத்தைக் குறிப்பிட்டு, இடைச்சொற் பொருள்களை வகைப்படுத்துக.

33. ஏகார மற்றும் ஓகார இடைச்சொல் தரும் பொருள்களை உதாரணங்களுடன் விவரி.

34. எண்ணிடைச் சொற்கள் பற்றி விளக்குக.

35. தொகை பெற்றும் பெறாதும் வரக்கூடிய எண்ணிடைச் சொற்கள் பற்றிப் புலப்படுத்துக.

36. தில், மன், மற்று, கொல் ஆகிய இடைச்சொற்களின் பொருள்களை உரிய எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

37. ஒடு, தெய்ய, அந்தில், ஆங்கு, அம்ம, மா ஆகிய இடைச்சொற் பொருள்களை விவரிக்க.

38. முன்னிலைக் கண் வரும் அசைகள், எல்லா இடத்தும் வரும் அசைச்சொற்கள் ஆகியவற்றை வகைப்படுத்தி விளக்குக.

39. இடையியலில் இடம்பெறும் இடைச்சொற்களையும் அவற்றின் பொருள்களையும் தொகுத்துரைக்க.

40. இடையியல் உணர்த்தும் செய்திகளைக் கட்டுரைக்க.

# அலகு - 5

## பகுதி - அ

### ❖ சரியான விடையைத் தேர்ந்தெடு

1. உரிச்சொற்கள் எதற்கு உரியன

அ) பெயர்

ஆ) வினை

இ) செய்யுள்

ஈ) குணம்

2. நன்னூலார் கூற்றுப்படி உயிர்களின் வகைகள்

அ) 5

ஆ) 7

இ) 6

ஈ) 4

3. மூவறிவுயிருக்கு எடுத்துக்காட்டு

அ) சங்கு

ஆ) புல்

இ) தும்பி

ஈ) சிதல்

4. மக்கள் எவ்வகை உயிர்

அ) நாலறிவுயிர்

ஆ) ஐயறிவுயிர்

இ) மூவுறிவுயிர்

ஈ) ஆறறிவுயிர்

5. உடம்பு என்பது

அ) உணர்வுப் பொருள்

ஆ) உயிர்ப் பொருள்

இ) உயிரல் பொருள்

ஈ) அறிவுப் பொருள்

6. உயிர்ப் பொருள்களின் தொழிற்பண்பு

அ) துய்த்துல்

ஆ) அச்சம்

இ) துன்பம்

ஈ) இன்பம்

7. நனி என்னும் உரிச்சொல்லின் பொருள்

அ) சொல்

ஆ) விரைவு

இ) மிகுதி

ஈ) புதுமை

8. வரைவு என்னும் சொல்லின் பொருள்

அ) மணம்

ஆ) வரைதல்

இ) செய்தி

ஈ) தொலைவு

9. “எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின்” - இதில் கடி என்பதன் பொருள்

அ) காப்பு

ஆ) விரைவு

இ) விளக்கம்

ஈ) அச்சம்

10. அரவம் என்னும் உரிச்சொல்லின் பொருள்

அ) பாம்பு

ஆ) கூர்மை

இ) சொல்

ஈ) ஓசை

விடைகள் 1.இ 2.அ 3.ஈ 4.ஆ 5.இ 6.அ 7.இ 8.அ 9.ஆ 10.ஈ

## பகுதி - ஆ

### ❖ ஓரிரு சொற்களில் விடையளி

11. பண்பு என்பது யாது?
12. ஐம்பொறிகள் யாவை?
13. ஈரறிவுயிர்களைச் சுட்டுக.
14. உயிரல் பொருள்களைக் குறிப்பிடுக.
15. உயிர்களின் தொழிற்குணம் இரண்டினை எடுத்துரைக்க.
16. மிகுதிப் பொருள் தரும் உரிச்சொற்கள் நான்கினை எழுதுக.
17. கடி என்னும் உரிச்சொல் உணர்த்தும் குணங்களின் எண்ணிக்கை யாது?
18. சொல் என்னும் குணத்தை உணர்த்தும் உரிச்சொற்கள் இரண்டினைச் சுட்டுக.
19. ”இமிழ்” என்னும் உரிச்சொல் தரும் பொருள் யாது?
20. ”பிங்கலம்” என்றால் என்ன?

## பகுதி - இ

### ❖ விரிவாக விடையளி

21. உரிச்சொல்லின் பொதுவிலக்கணத்தைக் குறிப்பிடுக.
22. உயிர்ப் பொருள்களை வகைப்படுத்தி விளக்குக.
23. உயிர்ப்பொருள்களின் குணப்பண்புகளை எடுத்துரைக்க.
24. உயிர்ப்பொருள்கள், உயிரல் பொருள்கள் ஆகிய இரண்டிற்கும் பொதுவான தொழிற்பண்புகளைப் புலப்படுத்துக.
25. ”ஓரறிவாதியா உயிரைந்தாகும்” - விவரிக்க.

THIRUPPANANDAL EDUCATION IS WEALTH

26. “கடி” என்னும் உரிச்சொல் உணர்த்தும் பொருள்களை விளக்குக.

27. ”சொல்” என்னும் ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்களை வகைப்படுத்துக.

28. ”ஓசை” என்னும் ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்களை எடுத்துரைக்க.

29. ”நல்லோர்” உரிச்சொலின் நயந்தனர் கொளலே” - விளக்கம் தருக.

30. பலகுணம் தழுவிய உரிச்சொல்லிற்குச் சான்றுகள் தந்து விவரி.

## பகுதி - ஈ

❖ **கட்டுரை வடிவில் விடையளி**

31. செய்யுட் குரியன உரிச்சொல்” - விவரிக்க.

32. உயிர்ப்பொருள்கள், உயிரல் பொருள்களை வகைப்படுத்தி விளக்குக.

33. உயிர்ப்பொருள்களின் குணம், தொழிற் பண்புகளை விவரி.

34. உயிர்ப் பொருள்கள் பற்றிய செய்திளைக் கட்டுரைக்க.

35. உயிரல் பொருள்கள் பற்றிய செய்திகளைக் தொகுத்துரைக்க.

36. ஒரு குணம் தழுவிய உரிச்சொற்கள் என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

37. உரிச்சொல்லின் பொதுவிலக்கணத்தைக் குறிப்பிட்டு ஒருகுணம், பலகுணம் தழுவிய உரிச்சொற்களின் பாகுபாட்டினை விளக்குக.

38. ஒருகுணம், பலகுணம் தழுவி வருதலாகிய உரிச்சொல்லின் இருவகைகளையும் எடுத்துக்காட்டுகளுடன் புலப்படுத்துக.

39. செய்யுளில் உரிச்சொற்களின் பங்களிப்பினை உரியியல் வழி விளக்குக.

40. உரியியல் உணர்த்தும் செய்திகளைத் தொகுத்துக் கட்டுரை வரைக.